பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 04 ஞாயிற்றுக்கிழமை (18.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 111

## ஓமந்தை பாலமோட்டையில் மூன்றாவது நாளாகவும் மோதல்

### படை நகர்வுக்கு முயற்சியாம்

வவுனியா,மார்ச்18

வவுனியா மாவட்டத்தின் ஓமந்தைப் பிரதேசத்தில் உள்ள பாலமோட்டையில் கடந்த மூன்று நாள்களாக இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் நடைபெற்றன.

அரச த்ரப்பில் படைநகர்வு ஒன்றுக்கான தாக்குதல்கள் நடத்தப்படுவதாக விடுதலைப் புலிகள் தரப்பில் கூறப்பட்டது.

***ஆனால், விடுவிக்கப்படாத பிரதேசங்களுக்கான வாகன மற்றும் மக்கள் போக்குவரத்தைத் தடுப்பதற்காக விடுதலைப் புலிகள் ஆட்லறி மற்றும் ஷெல் தாக்குதலைத் தீவிரமாக்கிவருவதாக படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.***

வவுனியா மாவட்டம், ஓமந்தைக்கு மேற்கே பாலமோட்டைப் பகுதியில் நேற்றுச் சனிக்கிழமையும் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றன.

நேற்றுக்காலை 8 மணிமுதல் இரண்டு மணிநேரமாக பரஸ்பரம் தாக்குதல்கள்

(03 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் கைதிகள் பரிமாற்றத்துக்கு யோசனை

### கண்காணிப்புக் குழுத் தலைவர் மூலம் கையளிப்பு

கொழும்பு,மார்ச்18

விடுதலைப் புலிகளிடம் உள்ள போர்க் கைதிகளையும் அரசாங்கத்தினர் தடுத்து வைத்துள்ள விடுதலைப் புலிகள் போராளிகளையும் கைதிகள் பரிமாற்றம் செய்வது குறித்து இப்போது ஆராயப்படுவதாக அறியப்படுகிறது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் லார்ஸ் சொல்பேர்க் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் செய்திருந்தவேளை -

கைதிகள் பரிமாற்றம் குறித்து அரசாங்கம் அவர்மூலம்விடுதலைப் புலிகளுக்குச் செய்தி அனுப்பியிருந்தது.

விடுதலைப் புலிகள் சமாதான செயலகத்தின்

(03 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு சாட்சிகளைப் பாதுகாக்கும் இறுக்கமான சட்டங்கள் தேவை

### கூட்டத்தொடரில் ஐ.நா.ஆணையாளர் வலியுறுத்து

இலங்கையில் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் சாட்சிகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான கட்டுக்கோப்பான, தளர்வற்ற சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவோருக்கு தண்டனை விலக்களிப்பதற்கு இடமளிக்காத வகையில் மனித உரிமைகள் சம்பந்தமான இறுக்கமான சட்ட திட்டங்கள் வகுக்கப்படுவது மிகவும் அவசியம்.

இவ்வாறு தெரிவித்தார் ஐ.நாவின்

(03 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை, நாகர்கோவில் பகுதிகளிலும் இரண்டு நாள்களாகத் தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச்.18

நாகர்கோவில் மற்றும் முகமாலை முன்னரங்க நிலைகளில் வெள்ளிக்கிழமை இரவு மோதல்கள் இடம்பெற்றுள்ளன

இந்த மோதல்களில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றுமொரு சிப்பாய் காயமடைந்தார் என்று தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

அதேவேளை - நாகர் கோயில் பகுதியில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கிப்படையினர் நேற்றுக்காலை படை நகர்வு ஒன்றை மேற்கொண்டனர் என்றும் - அதனைத் தாங்கள் முறியடித்து படையினரை அவர்களது பழைய நிலைக்கு பின்தள்ளிவிட்டனர் என்றும் - விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்று சனிக்கிழமை அதிகாலை 5.50 மணியளவிலும் படையினர் தமது முன்னரங்கநிலைகளைநோக்கி முன்னேற முயன்றனர் என்றும் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது என்றும் புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்றுத் தாக்குதல்கள் நடைபெற்ற போது, உசன், தம்பு தோட்டம், வரணி, மீசாலை தெற்கு ஆகிய பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததாகத் தகவல்கள் தெரிவித்தன - எனினும் ஏற்பட்ட சேதவிவரம் நேற்றிரவு வரை கிடைக்கவில்லை.(அ-1-4)

## இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதிலேயே அரசு அக்கறை

### அமெரிக்காவில் அமைச்சர் போஹொல்லாகம

வாஷிங்டன்,மார்ச்18

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதிலேயே நாம் அக்கறை காட்டுகின்றோம். இந்தியாவும் அதனை வெகுவாக ஆதரிக்கிறது.

இவ்வாறு அமெரிக்காவுக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் போஹொல்லாகம தெரிவித்தார்.

இலங்கை வெளியுறவு அமைச்சர் போஹொல்லாகம, அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொண்டலிஸா றைஸைச் சந்தித்து முக்கிய பேச்சுக்கள் நடத்தினார்.

(03 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீபதி சூரியாராச்சி நேற்றுக் கைது; செவ்வாய் வரை விளக்கமறியல்

கொழும்பு, மார்ச்.18

அமைச்சரவையில் இருந்து ஜனாதிபதியால் வெளியேற்றப்பட்ட ஸ்ரீபதி சூரியாராச்சி நேற்றுப் பிற்பகல் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட பின்னரும் அவர் அரச வாகனங்களைப் பயன்படுத்தினார் என்ற காரணத்துக்காக குற்றப்புலனாய்வுப் பொலிஸார் அவரை நேற்று விசாரணைக்கு உட்படுத்தினர்.

அதனைத் தொடர்ந்து அவரைக் கைது செய்த பொலிஸார் கொழும்பு மேலதிக நீதிவான் நிகால் பலப்பிட்டிய முன்னிலையில் ஆஜர் செய்தனர். எதிர்வரும் செவ்வாய்க் கிழமை வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கைது செய்யப்படுவதற்கு முன்னர் செய்தியாளர்களிடம் பேசிய சூரியாராச்சி சட்டரீதியாக அரச வாகனத்தை அரசிடம் கையளித்திருந்ததாகத் தெரிவித்திருந்தார்.

(அ-1-4-203)

## அச்சம் நிறைந்த ஏக்க நிலையில் குடாநாட்டு மக்கள் வாழ்கிறார்கள்

### ஆயர்கள் குழுவிடம் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், மார்ச்18

குடாநாட்டில் மக்கள் பெரும் பீதியுடனேயே வாழ்ந்து வருகின்றனர். எந்த நேரத்தில், என்ன நடக்குமோ என்ற அச்ச உணர்வுடன் அவர்கள் ஒவ்வொரு நிமிடத்தையும் கழிக்கும் ஏக்க நிலை நீடித்து வருகிறது.

கொலைகள், ஆள்கடத்தல்கள், கைதுகள் குறைவதற்கான எந்த அறிகுறியும் இல்லாமல் மக்களைத் தொடர்ந்தும் அச்சத்தில் உறைய வைத்துள்ளன.

யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டுள்ள ஆயர் குழுவிடம் இவ்விடயங்கள் நேற்று எடுத்துரைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் வந்துள்ள மன்னார், அநுராதபுரம், பதுளை ஆகிய மறை மாவட்டங்களைச் சேர்ந்த ஆயர்கள் நேற்றுப் பிற்பகல் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியப் பிரதிநிதிகளை, இணையக் காரியாலயத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் அ.கி.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில் இணையத்தில் அங்கம் வகிக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண் டனர்.

ஏ-9 பாதை மூடப்பட்டதன் காரணமாக குடாநாட்டு மக்கள் சுதந்திரமாக மாவட்டத்துக்கு வெளியே சென்று வருவதில் பலத்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள். அவர்களின் சுதந்திரமான நடமாட்டம் தடுக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் விமான, கப்பல் போக்குவரத்து சேவைகள் பொதுமக்களுக்குப் போதுமானவையாக இல்லை. மாவட்டத்துக்கு வெளியே செல்வதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் நீண்டகாலம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பொருளாதாரம் மற்றும் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளமை காரணமாக மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது.

எனவே இவற்றுக்குத் தீர்வு காண உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இணையப்பிரதிநிதிகள் ஆயர்களிடம் சுட்டிக்காட்டினர்.

யாழ். குடாநாட்டில் உள்ள பத்திரிகைகள் எதிர்நோக்கும் அச்சுத்தாள் நெருக்கடி தொடர்பாகவும் ஆயர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

இவை தொடர்பாக உரிய மட்டங்களுடன் தொடர்பு கொண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண தம்மாலான உதவி புரிவதாக ஆயர்கள் தெரிவித்தனர். (அ-8)

## 'நவ்றூ' தீவுக்கு அனுப்பவேண்டாம் என்று ஈழ அகதிகள் உருக்கமான வேண்டுகோள்

கொழும்பு,மார்ச்18

ஆஸ்திரேலியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள், தம்மை 'நவ்றூ' தீவுக்கு அனுப்பவேண்டாம் என்று ஆஸ்திரேலியக் குடிவரவுக் குடியகல்வுத் துறை அமைச்சர் கேவின் அன்றூவிடம் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ள 83 தமிழர்களில் 53பேர் கைச்சாத்திட்டு ஆஸ்திரேலிய அரசுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தாம் இலங்கைப் படைத்தரப்பின் நடவடிக்கைகள் காரணமாகப் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

அதன் காரணமாகப் பெரும் சிரமத்தின் மத்தியில் நாட்டைவிட்டு வெளியேறியதாகவும் அவர்கள் தமது மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமது விருப்பத்திற்கு மாறாக 'நவ்றூ' தீவில் தடுத்துவைக்கப்பட்டால் தமது மனோநிலை பெரிதும் பாதிப்படையும் என்று அந்த மகஜரில் தெரிவித்துள்ளனர்.

இந்த மகஜர் தொடர்பாக ஆஸ்திரேலிய குடிவரவு, குடியகல்வு அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஆயினும்83பேரும்திட்டமிட்டதுபோன்று 'நவ்றூ' தீவுக்கே அனுப்பிவைக்கப்படுவர் என்று அமைச்சர் கெவின் அன்றூ கூறினார்.

ஆள்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்குத் தமது நடவடிக்கை நல்ல பாடமாக அமையும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (203)

## யாழ். பாதுகாப்பு நிலைமை குறித்து ஆராய இராணுவத்தளபதி நேற்று யாழ்ப்பாணம் விஜயம்

யாழ்ப்பாணம், மார்ச்18

யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமை குறித்து ஆராய்வதற்காக இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

பாதுகாப்பு நிலைமைகளின் முன்னேற்றம், பொதுமக்களுக்கான நலன்புரித்திட்டங்கள் ஆகியன குறித்து அவர் படை அதிகாரிகளுடன் ஆராய்ந்தார்.

பலாலி விமான நிலையத்தில் யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி இராணுவத்தளபதியை வரவேற்றார்.

யாழ்.மாவட்ட நிலைமைகளை இராணுவத்தளபதிக்கு யாழ்.படைகளின் தளபதி விளக்கிக் கூறினார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள களத் தளபதிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களை சமாளிப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இராணுவத்தளபதி, களத்தளபதிகளுக்கு அறிவுறுத்தல்களை விடுத்தார்.

குடாநாட்டில் தற்கொலைத்தாக்குதல் தாரியிடம் இருந்து நேற்று முன்தினம் மீட்கப்பட்ட வெடிபொருள்களையும் அவர் பார்வையிட்டார். (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவை வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2007

## (மொழி மூலம் - தமிழ்/ சிங்களம்)

· நேற்றைய தொடர்ச்சி....

| | |
|---|---|
| 08. வழிகாட்டல் ஆலோசனை | 1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் உளவியல் அல்லது வழி காட்டலும் ஆலோசனையும் பாடத்துடனான பட்டம் அல்லது<br>2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுள்ள கல்விமாணிப் பட்டம் அல்லது<br>3) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுள்ள ஏதேனும் பட்டத்துடனான பட்டப்பின் கல்வி டிப்ளோமாச் சான்றிதழ் |
| 09.நூலக விஞ்ஞானம் | 1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெறப்பட்ட தகவல் தொழி நுட்பத்தை ஒரு பாடமாகக் கொண்ட ஏதேனும் பட்டம் அல்லது<br>2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெறப்பட்ட நூலக மற்றும் நூலக விஞ்ஞானத்துடனான பட்டம் அல்லது<br>3) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுள்ள ஏதேனும் பட்டத்துடன் தேசிய நூலக சபையினால் வழங்கப்பட்ட நூலக டிப்ளோமா அல்லது ஒரு வருட காலத்துக்கு குறையாத பயிற்சியைக் கொண்ட நூல கப் பயிற்சிச் சான்றிதழ். |
| 10.தகவல் தொழினுட்பப் பாடம | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுள்ள தகவல் தொழி னுட்பம்/கணனி விஞ்ஞானம் என்பவற்றுள் ஒன்றை ஒரு பாடமாகக் கொண்ட ஒரு பட்டம். அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெறப்பட்ட பட்டத்துடன் பல்கலைக்கழகம் அல்லது அதனை ஒத்த அங்கீ கரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வருடத்திற்குக் குறையாத கணனித் தொழிநுட்பம் / கணனி விஞ்ஞா னத்தில் டிப்ளோமாச் சான்றிதழ். |
| 11.ஆங்கில பாடம் | 1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங் கிலமொழியை ஒரு பாடமாகக் கொண்டு பெறப்பட்ட பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல் கலைக்கழகமொன்றில் பெறப்பட்ட ஆங்கில மொழி மூலமான பட்டத் ததுடன் பின்வருவனவற்றுள் குறைந் தது ஒன்றையாவது கொண்டிருத்தல்<br>அ) க.பொ.த (உ/த) பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தி<br>ஆ) க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கில மொழியில் விசேட சித்தி<br>இ) பல்கலைக்கழகம் அல்லது அதனையொத்த உயர்கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வருடத்திற்குக் குறையாத ஆங் கில மொழிக்கான டிப்ளோமா.<br>ஈ) அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றில் பெற்றுக்கொள் ளப்பட்ட ஒரு வருடத்துக்கு குறையாத ஆங்கில பாட சான்றிதழ் |
| 12. சமூகக்கல்விப் பாடம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுள்ள வரலாறு, புவி யியல், அரச அறிவியல் என்பவற்றுள் யாதுமொன்றை ஒரு பாடமாகக் கொண்ட கலைமாணிப் பட்டம். |
| 13. தமிழ் பாடம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தமிழ் பாடத்தை ஒரு பாடமாகக் கொண்ட கலை மாணிப்பட்டம் |
| 14. ஆரம்பக் கல்வி | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தமிழ் பாடத்தை ஒரு பாடமாகக் கொண்ட கலைமாணிப் பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆரம்பக் கல்வி பாடத்தினை உள்ளடக்கிய கல்விமாணிப் பட்டம் |
| 15. சமய பாடங்கள்:- | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் குறித்த பாடங்களுள் ஒன்றை உள்ளடக்கிய பட்டம்<br>குறித்த சமயபாடங்கள் |
| 15.1 இந்து சமயம் | இந்து சமயம்/இந்து நாகரிகம் |
| 15.2 இஸ்லாம் | இஸ்லாம்/அரபு, இஸ்லாமிய நா்கரிகம் |
| 15.3 கிறிஸ்தவம் (றோமன் கத்தோலிக்கம் ) | கிறிஸ்தவம்/கிறிஸ்தவ நாகரிகம் |
| 15.4 கிறிஸ்தவம் (றோமன் கத்தோலிக்கம் அல்லாதது) | கிறிஸ்தவம்/கிறிஸ்தவ நாகரிகம் |
| 15.5 பௌத்தம்/பௌத்த கலாசாரம் | பௌத்தம்/பௌத்த கலாசாரம் |
| 16. நாடகமும் அரங்கியலும் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் நாடகமும் அரங்கியலும் பாடத்தை ஒரு பாடமாகக் கொண்ட கலைமாணிப் பட்டம். |
| 17. கலைப் பாடங்கள் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் குறித்த கலைப்பாடங்களுள் ஒன்றை உள்ளடக்கிய கலைமாணிப்பட்டம்.<br>குறித்த கலைப்பாடங்கள் |
| 17.1 அளவையியல் | மெய்யியல். |
| 17.2 புவியியல் | புவியியல். |
| 17.3 பொருளியல் | பொருளியல். |
| 18. வர்த்தக பாடங்கள் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வர்த்தகமாணி அல்லது முகாமைத்துவமாணிப் பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறு வனத்தால் வழங்கப்பட்ட பொருத்தமான உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ். |
| 18.1 வர்த்தகம் | வர்த்தகம். |
| 18.2 கணக்கியல் | கணக்கியல். |
| 19. மனைப் பொருளியல் | 1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட மனையி யல் பாடத்தை உள்ளடக்கிய பட்டம் அல்லது<br>2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதா வதொரு பட்டத்துடன் க.பொ.த. (உ/த)பரீட்சையில் ஆகக்குறைந்தது திற மைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |
| 20. தொழில்நுட்பப் பாடம்<br>20.1 கடல் வள உயிரியல் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுள்ள பட்டத்துடன்<br>1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அதனையொத்த அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றில் குறித்த பாடத்துறையில் பெற்றுக்கொண்ட ஒரு வருடத்துககு குறையாத டிப்ளோமாச் சான்றிதழ் அல்லது<br>2) உரிய தொழில்நுட்ப பாடத்தில் குறைந்தது க.பொ.த. (சா/த) விசேட சித்தி பெற்றிருத்தல் |
| 21. உடற் கல்வி | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதா வது ஒரு பட்டத்துடன் பல்கலைக்கழகம் அல்லது அதனையொத்த அங்கீகரிக் கப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வருடத் திற்குக் குறையாத உடற்கல்வி பாடத்திற்கான டிப்ளோமா சான்றிதழ் அல்லது தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவகத்தின் டிப்ளோமா சான்றிதழ் அல்லது இலங்கை தேசிய விளையாட்டு அமைச்சினால் வழங்கப்பட்ட 6 மாத காலத்திற்குக் குறையாத விசேட பயிற்சி சான்றிதழுடன் கீழ்க் குறிப்பிடப் பட்டுள்ள விளையாட்டுத் தேர்ச்சிகளுடன் யாதொன்றைக் கொண்டிருக்கவேண் டும். இத்தேர்ச்சிகள் யாவும் அவரவரது பட்டச்சான்றிதழ் செயற்படும் திகதிக்கு முன்னுள்ள 08 வருடங்களுக்குள் பெறப்பட்டனவாக இருக்கவேண்டும்.<br>1. சர்வதேச விளையாட்டுப் போட்டியொன்றில் இலங்கையைப் பிரதிநிதித்து வப்படுத்தும் வகையில் பங்குபற்றியிருத்தல் வேண்டும். அல்லது<br>2. தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டியொன்றில் முதலாம், இரண் டாம், மூன்றாம் இடத்தைப் பெற்றிருக்க வேண்டும். அல்லது<br>3. மாகாண மட்டத்திலான விளையாட்டுப் போட்டியொன்றில் முதலாம், 2ஆம் இடத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது<br>4. மாவட்டப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டுத் தேர்ச்சிகள் யாவும் கல்வி அமைச்சு, விளையாட்டு அமைச்சு, மாகாண விளையாட்டு அமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சு, விளையாட்டு அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட் டுச் சம்மேளனம் ஆகியவற்றால் நடத்தப்பட்ட போட்டிகள் மூலம் வழங்கப் பட்ட சான்றிதழ் களை சமர்ப்பிப்பதன் பேரில் மட்டுமே அங்கீகரிக்கப்படும். |
| 22 க.பொ.த (உ/த) வகுப்புக்களில் விஞ்ஞானம், கணிதம் கற்பித்தல் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் குறித்த பாடத்தை /குறித்த பாடங்களை உள்ளடக்கியதான விஞ்ஞான/பிரயோக விஞ்ஞானப் பட்டம். |
| 22.1 பௌதீகவியல் | பௌதீகவியல். |
| 22.2 இரசாயனவியல் | இரசாயனவியல். |
| 22.3 உயிரியல் | உயிரியல். |
| 22.4 இணைந்த கணிதம் | தூயகணிதம்/பிரயோக கணிதம். |

## மாதிரி விண்ணப்பப் படிவம்

அலுவலக உபயோகத்திற்காக

**வடக்கு மாகாண பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரிய சேவைக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப்பரீட்சை-2007 (தமிழ்/ சிங்களம்)**

**Competitive Examination for Recruitment of Graduates to Sri Lanka Teachers' Service for the Vacancies Existing in the Northern Provincial Schools (Tamil/ Sinhala Medium)-2007.**

விண்ணப்பிக்கும்மொழி [ ] மாகாணம்: வடக்கு மாகாணம் :06 N

சிங்களம்-2,தமிழ்-3 (உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் நகரம் [ ]

| | |
|---|---|
| நிரந்தர வசிப்பிட மாகாணம் | |
| நிரந்தர வசிப்பிட நகரம் | |
| வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவு | |

01.1.1 முதலெழுத்துக்களுடன் பெயர்: ........................................................................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் இறுதியில் வரும் பெயரை முதலில் எழுதி முதலெழுத்துக்களை பின்னர் குறிப்பிடவும்.உ-ம் RAVI.A)

1.2 முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயரைக் குறிப்பிடவும். (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) (Rev/Mr/Mrs/Miss)

........................................................................

02.2.1 தற்போதைய முகவரி: (ஆங்கில பெரிய எழுத்தில்)

........................................................................

(அனுமதிப்பத்திரம் இந்த முகவரிக்கு தபாலிலிடப்படும்)

03.1. நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம் :

2. பிரதேச செயலாளர் பிரிவு: .............................. கிராம சேவகர் பிரிவு.....................

3. வதியும் கால எல்லை:.............................. தொடக்கம் ........................ வரை

4. வடக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்து இருப்பின், தங்கள் நிரந்தர மாவட்டம்..............................................................

5. தற்காலிகமாக இடம்பெயர்ந்து வதியும் மாவட்டம் ........................ மாகாணம்..........
இடம்பெயர்ந்த ஆண்டு ........................ மாதம்.................... திகதி......................

04.4.1 தேசிய அடையாள அட்டை
இல: [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

4.2 பிறந்த திகதி:
ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

4.3 2007.04.16ம் திகதியன்று வயது
ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

4.4 ஆண்/பெண் பால்: [ ]
பெண்-1 ஆண்-2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடுக)

4.5 விவாகமானவர்/விவாகமாகாதவர்:
விவாகமானவர்-1 விவாகமாகாதவர்:2 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடுக)

4.6 இன வகை: [ ]
சிங்களம்-1 தமிழ்-2 முஸ்லிம்-3 பறங்கியர்-4 ஏனையவை-5
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடுக)

05.பத்திரிகை அறிவித்தலின் பகுதி இல 7.4க்கு அமைய தங்களால் விண்ணப்பிக்கும் 05 பாடசாலைகளின் வெற்றிட விபரங்கள் தங்களது விருப்பத் தெரிவுக்கமைய குறிப்பிடவும்.(இத் தொடர் பின்னர் மாற்றப்படமாட்டாது என்பதைத் தயவாய் கருத்திற்கொள்ளவும்.)

| விருப்பத்தெரிவு | பாடசாலையின் பெயர் | வெற்றிட இலக்கம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

06.உயர் கல்வித் தகைமை பற்றிய விபரம்:

6.1 பட்டம் பெற்ற துறை: [ ]
விஞ்ஞான-1, கலை-2, வர்த்தகம்-3, ஏனையவை-4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடுக)

6.2 பட்டம் வழங்கிய பல்கலைக்கழகம் ..............................................

6.3 செல்லுபடியாகும் திகதி ..............................................

07.7.1 செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம்
(எழுத்துக்களில்)..............................................

7.2 பற்றுச்சீட்டின் இலக்கம் ..............................................

7.3 பணம் செலுத்திய அலுவலகம்..............................................

7.4 திகதி ..............................................

பற்றுச்சீட்டின் நிழற்பிரதியை நீர் வைத்துக்கொண்டு மூலப் பிரதியை கழராதவாறு இங்கே ஒட்டவும்.

08. நீங்கள் எப்பொழுதாவது எத்தகையதுமான ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்ற வாளியாக்கப்பட்டுள்ளீர்களா?
ஆம் [ ] இல்லை [ ] (உரிய கூட்டினுள் புள்ளடி ( X ) இடவும்)

09.விண்ணப்பதாரியின் உறுதியுரை:

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையான தென தெரிவிக்கிறேன். நான் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து சேவையில் இருந்து நீக்குவதற்கு உடன்படுகின்றேன்.

........................ ........................
திகதி விண்ணப்பதாரியின் ஒப்பம்

**10.விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல**

விண்ணப்பப் பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படை தாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் மற்றும் அரச சேவையில் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு/திருமதி/செல்வி.............................................. என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும் ........................ ஆம் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்ப மிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:..............................................

..............................................
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின்
முழுப்பெயர்:
பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

**11.வடக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக வேறு மாகாணத்திற்கு இடம் பெயர்ந்துள்ளவர்களின் உபயோகத்திற்கு**

மேற்படி விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர பிறப்பிடமாக/வதிவிடமாகக் கொண்டவர் என்பதை யும், அவர் ........................ திகதி முதல் தற்காலிகமாக இடம்பெயர்ந்து ........................ மாகாணத்தில் வசித்து வருகின்றார் என்பதையும் இத்தற்காலிக வதிவிடத்தை ஆதாரமாக வைத்து இம்மாகாண சபையில் எப்பதவிக்கும் விண்ணப்பிக்கவில்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி..............................................

..............................................
கிராம சேவையாளர் கையொப்பம்

கிராம சேவையாளர் பிரிவு
பிரதேச செயலாளர் பிரிவு பதவி முத்திரை

**12.திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

இத்திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி........................ ........ அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இப்பதவிக்கு தெரிவு செய் யப்படுமிடத்து அவரை விடுவிக்க முடியும் என்பதையும் இவர் தனது சேவைக்காலத்தில் எவ்வித ஒழுக் காற்று நடவடிக்கைக்கும் உட்படவில்லை என்பதையும் சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என் பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி..............................

..............................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## சர்வதேசத்தை ஏமாளியாக்க இலங்கை அரசு எத்தனம்

மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களில் மஹிந்தர் அரசின் கொடூரங்கள் சர்வதேச மட்டத்தில் அம்பலமாகத் தொடங்கியிருப்பதை அடுத்து அவற்றை சமாளிக்கும் பதில் நடவடிக்கைகளை அரசும் சர்வதேச மட்டத்தில் எடுத்திருக்கின்றது. பொய்களால் உண்மைகளுக்குச் சமாதி கட்டி, தனது அபத்த நடவடிக்கைகளுக்கு அர்த்தமும் நியாயமும் கற்பிக்கும் பிரசாரத்தை அரச இயந்திரம் முடுக்கிவிட்டிருக்கின்றது.

ஆனால், விஞ்ஞானத்தின் அபார வளர்ச்சியினால் பூமிப்பந்து பூகோளக் கிராமமாகச் சுருங்கி, உலகின் எங்கோ ஒரு மூலையில் நடக்கும் சம்பவம் பற்றிய தகவல் உலகின் மற்றொரு மூலைக்கு அடுத்த கணத்தில் எட்டிவிடும் அளவுக்குத் தகவல் தொழில்நுட்பம் விருத்தியடைந்துள்ள இன்றைய சூழ்நிலையில் -

மனித உரிமைககளை நடைமுறைப்படுத்தும் விடயத்தைக் கண்காணிக்கும் பொறுப்புடைய சர்வதேச அமைப்புகள், இலங்கையில் நேரடியாகவும், தனது நம்பகத் தன்மையுடைய முகவர்கள் மூலமாகவும் பிரசன்னமாகியிருந்து இலங்கை நிலைவரத்தை ஊன்றிக் கண்காணித்து வருகையில் -

அரசுக் கட்டமைப்பு என்ற தனது வலுவையும் பலத்தையும் வைத்துக்கொண்டு இலங்கை அரச நிர்வாகம், மனித உரிமை மீறல்கள் தொடர்பான தனது கெட்டபெயரை சமாளிப்பதற்காக எடுக்கும் பதில் நடவடிக்கைகள் - கோயபலஸ் பாணி பிரசாரம் - வெற்றியளிப்பது பெரும்பாலும் துர்லபமே. அதுவே இப்போது வெளிப்படையாகத் தோற்ற ஆரம்பித்திருக்கின்றது.

மனித உரிமை மீறல்கள், ஆட்கடத்தல்கள், அச்சுறுத்திக் கப்பம் அறவிடுதல், ஆட்களைக் காணாமற் போகச் செய்தல், மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் இராணுவ அடக்குமுறைகள் படையினர் புரியும் கொடூர அட்டூழியங்கள், அவற்றுக்கு ஆதரவும் தலையசைப்பும் வழங்கும் அரசின் மெத்தனப் போக்கு, அரசுத் தலைமையின் ஊழல் மோசடி நடவடிக்கைகள், அதிகாரத் துஷ்பிரயோகம் போன்ற இன்னோரன்ன அத்துமீறல்களை வெளியே தெரியாமல் அமுக்குவதற் கான முதற் செயற்பாடாக அவை பற்றிய செய்திகளை அம்பலப்படுத்தும் ஊடகங்களின் வாய்க்கு அச்சுறுத்தல் மூலமும் ஏனைய வழிகளில் இடைஞ்சல்களை ஏற்படுத்துவதன் மூலமும் பூட்டுப் போட எத்தனிக்கின்றது அரசுத் தலைமை.

ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதில் தொடங்கி ஊடகங்களுக்கான மூலப்பொருள்களைக் கிடைக்கவிடாமல் தடைசெய்து அவற்றின் வங்கிக் கணக்குகளை முடக்கி அவற்றுக்கு 'இயற்கைச் சாவு' போன்ற நிலைமை ஏற்படுத்துவது வரை இந்தக் கைங்கரியம் பல்வேறு மட்டங்களில் அரங்கேற்றப்படுகின்றது.

அரசின் இந்தச் செயற்பாட்டை பல்வேறு சர்வதேச ஊடக அமைப்புகள் வன்மையாகக் கண்டித்திருக்கின்றன. இந்த வரிசையில் கடைசி அறிவிப்பு சர்வதேச பத்திரிகையாளர் அமைப்பிடம் இருந்து வந்திருக்கின்றது.

இதேசமயம் ஊடகங்களுக்கு எதிராக - ஊடக சுதந்திரத்துக்கு எதிராக - அரச நிர்வாகம் கட்டவிழ்த்து விட்டிருக்கும் அராஜகத்தை சர்வதேச ரீதியில் வெளிப்படுத்தும் ஓர் அறிக்கையை இது தொடர்பான அமைப்புகளுக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கையை பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவும் ஆரம்பித்திருக்கின்றது.

இதேசமயம், தமிழர் தாயகப் பகுதிகள் மீது வலிந்த தாக்குதல்களை வேண்டுமென்றே பெரும் மெடுப்பில் ஆரம்பித்து பல லட்சம் மக்களை பேரிடருக்குள்ளும், பேரவலத்துக்குள்ளும் ஆழ்த்தியிருக்கும் அரசு , இடம் பெயர்ந்த அகதிகள் விடயத்தில் கொடுமையாகவும், மோசமாகவும், பொறுப்பற்ற முறையிலும், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமைகளுக்கு மாறாகவும் செயற்படுகின்றமை குறித்து பல சர்வதேச அமைப்புகள் கண்டனக்குரல் எழுப்பியிருக்கின்றன.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் சர்வதேச மன்னிப்புச் சபை போன்றவை இவ்விடயத்தில் முனைப்பாகவும் விரைந்தும் செயற்பட்டு உண்மைகளை அம்பலப்படுத்தியிருக்கின்றன.

இதேசமயம், ஆட்கடத்தல், அச்சுறுத்திக் கப்பம் பெறல், ஆட்களைக் காணாமற்போகச் செய்தல், படுகொலைகள் போன்ற 'அரச பயங்கரவாத' நடவடிக்கை கள் குறித்து தற்போது ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் ஆழமாக - ஊடுருவி - ஆராயப்படுகின்றது.

சர்வதேச மட்டத்தில் பல உண்மைகள் அம்பலமாகி, இலங்கை நிலைமை வெட்டவெளிச்சமாகத் தொடங்கியிருப்பதை அடுத்து, வழமைபோல முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கும் தனது பகீரதப் பிரயத்தன நடவடிக்கைகள் மூலம் இந்தக் குற்றச்சாட்டுக்களைச் சமாளிப்பதில் தீவிரம் காட்டுகின்றது இலங்கை அரசு.

ஜெனிவாவில் தற்போது நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத் தொடரில் இலங்கை நிலைமை தொடர்பாக பெரிய பொய்க்குண்டு ஒன்றை தூக்கிப் போட்டிருக்கின்றது இலங்கை.

தமிழர் தாயகத்திலும் தென்னிலங்கையிலும் ஆட்கடத்தல்கள் பெரும் கொடூரமாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இவை தொடர்பாக உள்ளூரில் வெளியாகும் புள்ளிவிவரங்களும் தகவல்களும் அதிர்ச்சி தருவனவாக உள்ளன. கடத்தப்பட்டோரில் கணிசமானோர் படுகொலை செய்யப்பட்டு வீதிகளிலும் ஆங்காங்கே யும் சடலங்களாகப் போடப்படுகின்றார்கள். பலரின் கதி என்னவென்றே தெரியவில்லை. உற்றாரும், உறவினர்களும், குடும்பத்தவர்களும் கதிகலங்கிப் போயிருக்கின்றார்கள்.

ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத்தில் விளக்கமளித்த ஜெனிவாவுக்கான இலங்கைத் தூதுவரான சரளா பெர்னாண்டோ அம்மையாரோ, இலங்கையில் ஆட்கடத்தல்கள் தொடர்பாகச் செய்யப்பட்ட முறைப்பாடுகளில் அனேகமானவை சுமுகமாகத் தீர்க்கப்பட்டுவிட்டன என்று கதை அவிழ்த்து விட்டு, பலரையும் அதிர்ச்சிக்குள்ளும் வியப்புக்குள்ளும் ஆழ்த்தியிருக்கின்றார்.

மனித உரிமைகள் விடயத்தில் மிக மோசமாக நடந்து கொண்டுவிட்டு, அதை சமாளிப்பதற்கு இவ்வாறு சர்வதேசத்துக்கு கதைவிடும் இலங்கை அரசு சர்வதேசம் அதை நம்பிவிட்டதாகக் கருதித் தீக்கோழி போல திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான். சர்வதேசம் அவ்வளவு தூரத்துக்கு ஏமாளித்தனமானது அல்ல என்பதே உண்மை.

# 2,500 ரூபாவுக்குக் கூடுதல் வருமானம் பெறுபவர்களுக்கு நிவாரணம் கிடைக்காது

### அரச அதிபர் பிரதேச செயலர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 18

இரண்டாயிரத்து 500ரூபாவுக்கு மேற்பட்ட மாத வருமானம் பெறுவோரில் எவருக்கேனும் உலருணவு நிவாரணம் வழங்கப்பட்டால் அதனை உடனடியாக நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ்.அரச அதிபர் பிரதேச செயலர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மாத வருமானமாக இரண்டாயிரத்து 500 ரூபாவுக்கு மேற்பட்ட தொகையைப் பெறுவோர் உலருணவு நிவாரணம் பெறமுடியாது. அவ்வாறு யாராவது பெற்று வந்தால் அதனை உடன் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பிரதேச செயலர்கள் எடுக்க வேண்டும். இத்தகையோரை கிராம சேவையாளர் இனங்கண்டு பிரதேச செயலர்களுக்கு அறிவிக்க வேண்டும். பங்கீட்டு அட்டை மீளாய்வின் போது மாதவருமானம் தொடர்பான மீளாய்வும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்- என்றும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

## * மிருசுவில் வடக்கில் குடும்பஸ்தர் சுடப்பட்டார்

யாழ்ப்பாணம், மார்ச்18

மிருசுவில் வடக்கில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த குடும்பஸ்தர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த சி.மெய்கண்டதேவர் (வயது - 48) என்பவரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் -

தலையில் படுகாயமடைந்த இவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாகவும் - யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன. (அ-1)

## சமய, சமூகப் பிரமுகர் கனகரத்தினம் காலமானார்

யாழ்ப்பாணம், மார்ச் 18



குடாநாட்டின் மூத்த சட்டத்தரணிகளில் ஒருவரும், சமய, சமூகப் பிரமுகருமான சி.கனகரத்தினம் தமது 87 ஆவது வயதில் காலமானார்.

யாழ்ப்பாணத்தில் திவ்விய ஜீவன சங்கத்தை நிறுவி அதன் வளர்ச்சிக்காகப் பெரிதும் உழைத்தவர். சுவாமி சிவானந்தரை அடிக்கடி தரிசித்தவர்.

இவர் வெளிநாடுகளில் இடம் பெற்ற பல சமய மாநாடுகளில் கலந்து கொண்ட சிறப்புடையவர். வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைவராகவும் பணிபுரிந்தார். யாழ்.றோட்டரிக் கழகத்தின் நீண்ட நாள் உறுப்பினருமாவார்.

இவரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் புதன்கிழமை இடம் பெறவுள்ளது.

## இலங்கையில் மனித....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆபர் அம்மையார்.

ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டதொடரைப் பூர்த்தி செய்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இதனைத்தெரிவித்தார்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப் படுவது குறித்த அமர்வின் இறுதியில், ஜெனிவாவுக்கான இலங்கைத் தூதுவர் சரளா பெர்னாண்டோ - நாட்டின் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த கடத்தல், காணாமற்போதல் குறித்த குற்றச்சாட்டுக்களில் மிகப் பலவற்றுக்கும் தீர்வு காணப்பட்டுவிட்டதாகக் கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார்.

கொலைகள், கடத்தல்கள் காணாமற்போதல் என்பன பிந்திய புண்ணியங்கள் பிரகாரம் இப்போது மிகவும் குறைந்து விடு வதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்த வேளையிலேயே - தமது முடிவுரையின் போது ஐ.நா. உயர்ஸ்தானிகர் லூயிஸ் ஆபர் அம்மையார் முன்னர் குறிப்பிடப்பட்ட கருத்தை வெளிப்படுத்தியிருந்தார். இதேவேளை, இலங்கையில் மனித உரிமைகள் பெருமளவில் மீறப்படுவது குறித்து சர்வதேச ஜூரர்கள் ஆணைக் குழுவும் தனது பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

(அ)

## ஓமந்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றதாகத் தகவல்கள் தெரிவித்தன.

வியாழன், வெள்ளிக்கிழமைகளில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் அரச தரப்பில் ஐந்து படையினர் கொல்லப்பட்டனர் என்றும் 23 படையினர் காயமடைந்தனர் என்றும் தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.இந்தத் தாக்குதல்களில் விடுதலைப் புலிகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கும் என்றும் படைத்தரப்புத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாலமோட்டைப் பகுதியில் படையினர் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட படைநகர்வு முறியடிப்பின்போது 18 படை யினர் கொல்லப்பட்டதாகவும், 35 பேர் காயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் படையினர் மேற்கொண்ட படைமுன்நகர்வு நடவடிக்கை முறியடிக்கப்பட்டு பின்தள்ளப்பட்டனர் என்றும் இராணுவத் தளபாடங்கள் பல கைப்பற்றப்பட்டன என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகலிலும் ஓமந்தைக்கு மேற்குப் பக்கமாக தொடர்ந்தும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெறுவதாகத் தகவல்கள் தெரிவித்தன.

## அரசு - புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளரிடம் அந்த யோசனையை கண்காணிப்புக் குழுவின் தலைவர் கையளித்திருந்தார்.

அரசாங்கத்தின் யோசனையை விடுதலைப் புலிகள் பரிசீலித்து வருகிறார்கள். ஆனால் அதன் சாதக, பாதக நிலைகுறித்து இப்போது எதுவும் தெரிவிக்கமுடியாது. அவர்களின் முடிவு தெரியவருவதற்கு இன்னும் பல நாள்கள் செல்லலாம் - என்று கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தொபினுர் ஓமர்சன் நேற்றுத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் வசம் உள்ள ஐந்து போர்க்கைதிகளுக்குப் பதிலாக ஐந்து விடு தலைப் புலிப் போராளிகளைப் பரிமாறிக்கொள்ள அரசாங்கம் விருப்பம் தெரிவித்திருக்கிறது.

## இனப்பிரச்சினைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீபன் ஹட்லி, சட்டமா அதிபர் அல்பேர்ட்டோ, கொன்சல்ஸ் ஆகியோரையும் -

பாதுகாப்பு அமைச்சு, நிதி அமைச்சு ஆகியவற்றின் உயர் அதிகாரிகளையும் அவர் சந்தித்துப் பேசினார்.

புலிகளுக்கு நிதி திரட்டுவதைத் தடுக்கவும்

அரசாங்கத்திற்கு எதிராக வன்செயல்கள் புரியும் விடுதலைப்புலிகளுக்கு அமெரிக்காவில் நிதி திரட்டுவதை நிறுத்த வேண்டும் என்று அவர் உயர் அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளார். இலங்கை திரும்புமுன்னர் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில்:-

இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியா தனது பங்களிப்பைச் செய்வதோடு மட்டுமன்றி அதற்குப் பெரும் ஆதரவை நல்கி வருவதாகவும் தெரிவித்தார்.

நாங்கள் ஜாதியல் தீர்வைக் காண்பதிலேயே அக்கறை காட்டுகின்றோம். இந்தியாவும் அதை மிகவும் ஆதரிக்கின்றது- என்றார். (அ)

## நாளை

பங்குனி - 05
திங்கட்கிழமை
19.03.2007
திதி: அமாவாசை
மு.ப : 9.00 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி
பின்னிரவு : 05.52
சுபநேரம் : 12.18 - 01.48
ராகுகாலம் : 07.48 - 09.18

# வடமராட்சிக் கடலில் மீன்பிடிக்க நிபந்தனையின் அடிப்படையில் அனுமதி

கரவெட்டி, மார்ச் 18

வடமராட்சிக் கடற்பரப்பில் நிபந்தனைகளின் அடிப்படையில் மீன் பிடிப்பதற்கு நேற்றுமுதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக கடற்றொழில் செய்வதற்கு மீனவர்களுக்கு வடமராட்சியில் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

✱ கரையில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் வரைதான் சென்று மீன் பிடிக்க முடியும்.

✱ கட்டுமரங்களில் சென்று மீன் பிடிக்கலாம். ஆனால், அவற்றில் இயந்திர சாதனங்கள் எதுவும் பொருத்தப்படக் கூடாது.

✱ காலை 6 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை மட்டுமே மீன்பிடிக்கலாம்.

ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் நடைபெறுவதால் மீனவர்கள் கரைநோக்கி வருவது குறைவாக இருப்பதாக மீனவர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வடமராட்சிக் கரையோர மீனவர்களுக்கு தொழில் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட போதிலும் வல்வெட்டித்துறை, ஆதிகோயிலடி, கெருடாவில், மயிலியதனை, தொண்டைமானாறு போன்ற கடற்பிரதேசங்களில் மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-203-70)

## உணவுப் பொருள்கள் அடங்கிய 4 ஆயிரம் பொதிகள் தபாலகத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 18

திருகோணமலையில் தேங்கிக் கிடந்த உணவுப் பொதிகள் அடங்கிய தபால் பொதிகளில் 4ஆயிரத்து 451 பொதிகள் யாழ்.தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

திருமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு நேற்று வந்து சேர்ந்துள்ள 'ஜால' கப்பலில் 5ஆயிரத்து 351 உணவுப் பொருள்கள் அடங்கிய தபால் பொதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்தப் பொதிகளில் 4ஆயிரத்து 451 பொதிகள் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு யாழ்.தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்தப் பொதிகள் தரம்பிரிக்கப்பட்டு நாளை திங்கட்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்படும்.

எஞ்சிய பொதிகள் ஓரிரு தினங்களில் யாழ்.தபாலகத்துக்கு எடுத்து வரப்படும் என்று யாழ்.தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

### பல்கலைக்கழக அனுமதி
### கல்வியாண்டு - 2006/2007

2006 க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து 2006/2007 கல்வியாண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் கற்கைநெறிகளைப் பயில்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான அனுமதிக் கடிதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மாணவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேற்படி கற்கைநெறிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பின்வரும் ஆவணங்களுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் தங்கள் பதிவை *யாழ். பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில்* மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

| கற்கை நெறி | பதிவுசெய்யும் திகதி | நேரம் |
|---|---|---|
| 01) விஞ்ஞானம்(பௌதீகம்) | 21.03.2007 | 9.00 - 12.00 |
| 02) விஞ்ஞானம்(உயிரியல்) | 21.03.2007 | 9.00 - 12.00 |
| 03) கணனி விஞ்ஞானம் | 21.03.2007 | 9.00 - 12.00 |
| 04) சித்தமருத்துவம் | 22.03.2007 | 9.00 - 12.00 |
| 05) மருத்துவம் | 23.03.2007 | 9.00 - 12.00 |
| 06) விவசாயம் | 26.03.2007 | 9.00 - 12.00 |
| 07) முகாமைத்துவம் | 27.03.2007 | 9.00 - 12.00 |
| 08) வர்த்தகம் | 28.03.2007 | 9.00 - 12.00 |
| 09) மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம் | 29.03.2007 | 9.00 - 12.00 |
| 10) தாதியியல் | 29.03.2007 | 9.00 - 12.00 |
| 11) மருந்தியல் | 29.03.2007 | 9.00 - 12.00 |
| 12) சங்கீதம் | 29.03.2007 | 9.00 - 12.00 |
| 13) நடனம் | 30.03.2007 | 9.00 - 12.00 |
| 14) சித்திரமும் வடிவமைப்பும் | 30.03.2007 | 9.00 - 12.00 |
| 15) சட்டம் | 30.03.2007 | 9.00 - 12.00 |
| 16) கலை | 03.04.2007, 04.04.2007, 05.04.2007 & 06.04.2007 | 9.00 - 12.00 |

பதிவு செய்யப்படாதோரின் பெயர்ப்பட்டியலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பவேண்டியுள்ளதால் தங்களது பதிவினை 06.04.2007 இற்கு முன் மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின் றீர்கள்.

விஞ்ஞான பீட மாணவர்களுக்கான (பௌதீக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், கணனி விஞ்ஞானம்) அறிமுக நிகழ்வு 22.03.2007 ஆம் திகதி நடைபெற்று கணனி, ஆங்கில வகுப்புகள் ஆரம்பமாகும். விரிவுரைகள் 09.04.2007 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

ஏனைய கற்கைநெறிகளுக்கான **விரிவுரைகள் ஆரம்பமாகும்** திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள்**

1) பிறப்புச் சான்றிதழ்(மூலப்பிரதியும் போட்டோப்பிரதியும்)
2) பாடசாலை விடுகைப் பத்திரம்(மூலப்பிரதியும் போட்டோப் பிரதியும்)
3) நிழற்படப்பிரதி(அளவு 2"X 2 ½" )கறுப்பு வெள்ளை- 08 பிரதிகள்
4) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அனுப்பப்பட்ட கடிதம்
5) தேசிய அடையாள அட்டையின் போட்டோப்பிரதி (சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்டது)
6) க.பொ.த.(உயர்தரம்) பெறுபேறும் அதன் "Z" ஸ்கோர் விவரமும். (மூலப்பிரதியும் போட்டோப் பிரதியும்)

**செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள்**

| | |
|---|---|
| பதிவுக் கட்டணம் | ரூபா 150 |
| ✱ ஆய்வுகூடக் கட்டணம் | ரூபா 300 |
| வைத்தியக்கட்டணம் | ரூபா 100 |
| கைநூல் | ரூபா 65 |
| மாணவர் வழிகாட்டி நூல் | ரூபா 10 |

✱ **ஆய்வுகூடக் கட்டணம் ரூபா 300** : கலை, வர்த்தகம், முகாமைத்துவம், சட்டம் தவிர்ந்த ஏனைய கற்கைநெறிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டோர் அனைவரும் ஆய்வுகூடக் கட்டணம் செலுத்தவேண்டும். புவியியலை ஒரு பாடமாகத் தெரிவுசெய்யும் கலைப் பிரிவு மாணவர்களும் ஆய்வுகூடக் கட்டணம் செலுத்தவேண்டும்.

தெரிவுசெய்யப்பட்டோரின் பெயர்ப்பட்டியலை **யாழ். பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும்** கிளை விளம்பரப் பலகையிலும் www.jfn.ac.lk என்ற இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**யாழ்ப்பாணம் தவிர்ந்த பிற மாவட்ட மாணவர்களுக்கு** பதிவு விண்ணப்பப் படிவங்கள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. மேலதிக விவரங்களையும் மாதிரி விண்ணப்பப்படிவத்தையும் www.jfn.ac.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம். விண்ணப்பபடிவங்கள் கிடைக்காதோர் இணையத் தளத்திலிருந்து பிரதி செய்து தங்களது பதிவினைப் பதிவுத் தபால் மூலமாக உடன் மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தபால் மூலம் பதிவுசெய்பவர்கள் தங்கள் பெயர், சுட்டிலக்கம், கற்கைநெறி, பதிவுத் தபால் இலக்கம், திகதி என்பனவற்றை குறிப்பிட்டு 021 222 2006 என்ற எண்ணுக்கு தொலைநகல்(Fax) செய்து தங்களது பதிவை உறுதிப்படுத்த வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 6714 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

**பதிவாளர்**
**16.03.2007**

(சி/50811)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IELTS



Essential course for migration and higher studies in Australia, UK, New zealand & Canada

நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் இங்கு பயிற்சி பெற்று நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். British Council இன் அங்கீகாரம் பெற்ற நிறுவனம். முற்றிலும் புதிய நூல்கள் வேண்டிய நேரம் Listening Practice செய்ய வசதிகள் பேச்சுப் பயிற்சி போன்ற சகல பாடநெறிகளும் British Council Colombo இன் நடைமுறை போன்றே. வகுப்புக்கள் திங்கள் தொடக்கம் வியாழன் வரை பகல் 10.00 – 12.00 வரை STEP UPTO IELTS PROGRAMME. சனி, ஞாயிறு நாட்களில் 8.00 – 11.00 மணி வரை ADVANCED EXAM LEVEL PROGRAMME.

**விசேட ஏற்பாடுகள்**

* September - 2007 இல் U.K Australia, Canada போன்ற நாடுகளில் University களில் அனுமதி பெற இருப்பவர்களின் Language தேவையைக் பூர்த்தி செய்யும் நோக்கத்தில் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
* பரீட்சைக்கு Registration செய்வதற்கு கொழும்புக்குப் போக வேண்டியதில்லை. நாங்கள் பதிவு செய்து தருவோம். பரீட்சைக்கு மட்டும் கொழும்புக்குச் சென்றால் போதும்
* 75 மணி நேரம் போதனைகள். கட்டாயமாக எமது நிலையத்தில் 30 மணி நேரம் Listening Practice செய்ய வேண்டும்.

புதிய வகுப்புக்கள் 31.03.2007 இல் ஆரம்பமாகின்றன.

**BRITISH COLLEGE OF ENGLISH**
141, Adiyapatham Road, Thirunelvely.
T.P:0779934783


## நெஞ்சைவிட்டு அகலாத நினைவுகளுடன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### துரைஐயா சுதாதரன்

(கிராம அலுவலர், மருதங்கேணி J/424, முன்னாள் கிராம அலுவலர் ஏழாலை தென்மேற்கு J/202)



பிறப்பு 1966 - 09 - 13
இறப்பு 2006 - 03 - 28
திதி : 18 - 03 - 2007

தம்பி, தம்பி என்று என்னை
ஆசையுடன் அரவணைத்து
ஆசையுடன் கொஞ்சும் என் அப்பாவின்
முகத்தை என்று காண்பேனோ
ஓராண்டென்ன இன்னும்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவில் வாழும்:

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை. (58862)

தாய், மனைவி,
சு.பிரணவசுதன்(மகன்).

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பொன்னம்மா கந்தசாமி

மலர்வு : 26.05.1919 உதிர்வு: 08.04.2005
திதி 18.03.2007

அம்மா உங்கள் பிரிவுத் துயரால்
ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்திடுனும்
உங்கள் அன்பு முகம் மறந்திடுமா
அன்பால் எம்மை வளர்த்த அன்னையே
நீங்கள் விண்ணுலகிருந்து
எம்மை ஆசீர்வதிப்பீர்களாக.

பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மூத்த விநாயகர் கோயிலடி வடக்கு,
ஆனைக்கோட்டை. (58863)


**கற்சாமியில்...**
தரம் 1 முதல்
O/L வரையான முதலாம் தவணைப் பரீட்சை வினாத்தாள் பெறலாம்.

உள்நாட்டு, வெளிநாடுகளுக்கான கடிதங்கள், பொதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**திருமுருகன் கொம் நெற்**
259, கே. கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. : 7835
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. தொ.பே: 7310

**வீடு வாடகைக்கு**

14, அரசடி வீதி, சங்கிலியன் வீதிக்கு அருகில், நல்லூரில் மேல் மாடி வீடு வாடகைக்கு உண்டு. அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0776136374

**விற்பனைக்கு**

பெரிய சோக்கேஸ், ஸ்ரீல் அலுமாரி, கட்டில் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.S.நாதன், இல. 16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே.: 0776146434

**வீடு வாடகைக்கு**

சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. சட்டநாதர் றோட். இளங்கலைஞர் மன்றத்திற்கு முன்பு. தொடர்பு - க.நல்லநாதன், 32, சட்டநாதர் றோட், நல்லூர். தொ.பே. 021 2228231

**உடன் தேவை**

போட்டோ கொப்பி மெசின் (Sharp) தேவை. நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளப்படும்.
தொ.பே. 0214591638 (58860)


**தவறிவிட்டது**

கிளிநொச்சி, உருத்திரபுரம் என்னும் முகவரியைச் சேர்ந்த கதிரவேலு மார்க்கண்டு என்பவரது தேசிய அ. அட்டை (460990378v) 10.03.2007 அன்று மானிப்பாய்க்கும் மருதனார்மடத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க. மார்க்கண்டு, ஊரெழு மேற்கு, சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.
தொ.பே. 0776365750 (58878)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகராசா வேதநாயகம்

தென்மராட்சி, மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கனகராசா வேதநாயகம் 14.03.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகராசாவின் அன்பு மனைவியும் கலாரஞ்சனி (பிரான்ஸ்), தவரஞ்சினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, சுப்பிரமணியம், தம்பிமுத்து, உமையம்மை ஆகியோரின் சகோதரியும் குணசீலன் (பிரான்ஸ்), பரதராசா (லண்டன்) ஆகியோரின் மாமியும் நித்திலா, நித்திகன், கர்ணன், பார்த்திகன், மயூரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.03.2007 புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0033164103970
0044247659036O

தகவல்:
- பிள்ளைகள். (58871)



### திருமதி சரவணபவன் மனோன்மணி

(நயினாதீவு)

நயினாதீவு, 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மனோன்மணி சரவணபவன் (ஓய்வுபெற்ற ஆசிரியை) நேற்று (17.03.2007) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துகுமாரு - மீனாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சரவணபவனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நல்லையா, வாலம்பிகை மற்றும் ருக்குமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரஞ்சோதி (முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர்), பாலகிருஷ்ணபாரதி (ஜேர்மனி), சிவகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் தவமணி, பரமேஸ்வரி, ரஞ்சினி ஆகியோரின் மாமியும் பத்மினி, கலைமகள், ஜீவபூரணி, கல்பனா, பாலசரவணன், ஜனார்த்தன், சுரேகா, பாலகுருபரன், லக்ஷனா, திலீபா, வினோபா, சுதாகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2007) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (58891)

தகவல்:
ச.பரஞ்சோதி (மகன்)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### திருமதி கனகி உத்தமிப்பிள்ளை



அன்னை மடியில் 15.05.1913
ஆண்டவன் அடியில் 18.02.2007

எத்தனை செல்வங்கள் வந்தாலும்
எத்தனை இன்பங்கள் தந்தாலும்
அத்தனையும் உனக்கு நிகராகுமா?
இத்தனையும் இருந்து அரும் பெரும்
சொத்தாகிய அம்மா நீ இல்லையே!
தாங்குமா எம் இதயம்?

இன்று (18.03.2007) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் குடும்பத்தலைவியின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

- குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



### அமரர் மாணிக்கம் பரஞ்சோதி

இன்று (18.03.2007) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாவடி வடக்கு, கொக்குவில். (58895)

- குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### சின்னத்துரை கனகரத்தினம்



(ஜே.பி.யு.எம்)
(அரச சட்டத்தரணி - யாழ்ப்பாணம், முன்னாள் தலைவர், வடபிராந்திய போக்குவரத்துச் சபை),

எமது உயர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் ஊக்கம் கொடுத்து
உழைப்பின் மேன்மையை உணர்த்திய உத்தமரின்
மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின்
துயரில் நாமும் பங்கெடுப்பதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஜி.எஸ். லிங்கநாதன் அன் கோ
உரிமையாளர்களும், ஊழியர்களும். (58888)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அமிர்தலிங்கம் இரத்தினம் (அமுதர் அம்மா)



அல்வாய், புதுக்குளம் கரை பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி ஒழுங்கை, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற அமிர்தலிங்கத்தின் (அமுதர் ஐயா) அன்பு மனைவியான அமிர்தலிங்கம் இரத்தினம் 16.03.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

'மருதகோட்டம்'
ஆஸ்பத்திரி ஒழுங்கை, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
(அ. கணேசலிங்கம் - மகன்)

### நாராயணபிள்ளை நாகராசா (கூப்பன்)

(முன்னாள் சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர், இயந்திரப் பராமரிப்புப் பகுதி)



மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் தில்லையம்பதி, நந்தாவிலைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை நாகராசா 17.03.2007 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாராயணபிள்ளை-கண்மணி தம்பதியரின் அன்பு மகனும் நடராசா (ஓய்வுபெற்ற சிமெந்து கூட்டுத்தாபன உத்தியோகத்தர் - சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் தலைவர்), நவரத்தினம் (முன்னாள் மக்கள் வங்கி பிரதேச முகாமையாளர்), நாகேஸ்வரி (மலேசியா), பரமேஸ்வரி (U.K.), நற்குணரத்தினம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சகுந்தலா, கானகலாதேவி (கொழும்பு), ஜெயந்தி (ஆஸ்திரேலியா), சீவரத்தினம் (மலேசியா), பாலசிங்கம் (U.K.), ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் கருணாகரன் (ஆஸ்திரேலியா), சுதாகரன் (U.K.), குமுதினி (கனடா), நந்தினி (மலேசியா), சுரேஸ், (U.K.), லோஜி (ஆசிரியை, கொழும்பு), நர்மலா (ஆஸ்திரேலியா), பிருந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சிறியதந்தையும் நோர்மலாதேவி (மலேசியா), சந்திராதேவி (மலேசியா), சித்திராதேவி (மலேசியா), கதிர்காமேஸ்வரன் (மலேசியா), பிரமரஞ்சினி (U.K.), தில்லைராஜன் (U.K.) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.03.2007) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (F-50814)

தகவல்:
நா.நடராசா
(சகோதரன்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org